## 4. அறிவிப்பு—தொடர்ச்சி

## உறுப்பினர்களுக்கு, நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல்-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய வெளியீடுகள், நூல்கள் மற்றும் குறுந்தகடு வழங்குதல்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட 9 தொகுதி நூல்கள் அடங்கிய பெட்டியை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் பேரவை நூலகப் பிரிவு-2-லிருந்து பெற்றுக்கொள்ளுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும், ஊரக வளர்ச்சித் துறை சார்பாக இன்றையதினம் 2008-2009 ஆம் ஆண்டுக்கான அறிவிப்புகள் மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுக்கான அறிவிப்புகள் மீதான நடவடிக்கை விவரம், உயர்மட்டக் குழு பரிந்துரைமீதான நடவடிக்கைகள் பற்றிய குறுந்தகடு (C.D.) ஆகியவையும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

## 3. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

—தொடர்ச்சி

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அற்புதமான புள்ளிவிவரங்களையும், தெளிவான கருத்துக்களையும், வரக்கூடிய ஆண்டுகளிலே இந்த உள்ளாட்சித் துறை எப்படி பயணிக்கவிருக்கிறது என்பதையெல்லாம் மிக அருமையாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் சார்பிலே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எங்களுடைய நெஞ்சார்ந்த பாராட்டுதல்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS